செ.வெ.எண்: 48 நாள்: 27.11.2020

**விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் மற்றும் செஞ்சி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நிவர் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் மற்றும் செஞ்சி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நிவர் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு இன்று (27.11.2020) ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டத்திற்குட்பட்ட மேல்மலையனூர், கோவில்புரையூர், கப்ளாம்பாடி, அவலூர்பேட்டை ஆகிய ஊராட்சிகளில் நிவர் புயலினால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த நெல், வாழை, உளுந்து மற்றும் கரும்பு ஆகிய பயிர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து செஞ்சி வட்டத்திற்குட்பட்ட நல்லான்பிள்ளைபெற்றால் ஊராட்சியில் ஊற்று வாய்க்காலில் நீர் செல்வதையும், புத்தகரம், நரசிங்கராயன்பேட்டை ஆகிய ஊராட்சிகளில் மழைநீரில் சேதமடைந்த மல்பெரி மற்றும் வாழைப் பயிரினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக மேல்மலையனூர் வட்டம் அவலூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நிவர் புயலால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த பயிர்கள் குறித்து வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை (நீ.வ.ஆ) ஆகிய துறைகள் சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில் நிவர் புயலால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த பயிர் இழப்புகளை உடனடியாக கணக்கீடு செய்யுமாறும், ஏரி, குளம் உள்ளிட்ட நீர்நிலைகளில் உள்ள நீரின் கொள்ளளவு மற்றும் மதகுகள் ஆகியவைகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் எனவும், கிராம ஊராட்சிப் பகுதிகளில் தேங்கி நிற்கும் மழைநீரினை உடனடியாக அகற்றிடவும், அப்பகுதிகளில் நோய் தொற்று ஏற்படாத வகையில் பிளிச்சிங் பவுடர் மற்றும் கிருமிநாசினிகளை தெளித்து சுகாதாரமாக வைத்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது வேளாண் இணை இயக்குநர் திரு.ராஜசேகர், பொதுப்பணித்துறை (நீ.வ.ஆ) செயற்பொறியாளர் திரு.ஜவகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.பெரியசாமி, முன்னாள் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.செஞ்சி சேவல் வெ.ஏழுமலை, வேளாண்மை உதவி இயக்குநர் திரு.சுரேஷ், வருவாய் வட்டாட்சியர்கள் திருமதி.நெகருன்னிசா (மேல்மலையனூர்), திரு.ராஜன் (செஞ்சி), வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.